ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

त्यक्त्वा ममाहमिति बन्धकरे पदे द्वे मानावमानसदृशाः समदर्शिनश्च ।
कर्तारमन्यमवगम्य तदर्पितानि कुर्वन्ति कर्मपरिपाकफलानि धन्याः ॥

𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌮𑌮𑌾𑌹𑌮𑌿𑌤𑌿 𑌬𑌨𑍍𑌧𑌕𑌰𑍇 𑌪𑌦𑍇 𑌦𑍍𑌵𑍇 𑌮𑌾𑌨𑌾𑌵𑌮𑌾𑌨
𑌸𑌦𑍃𑌶𑌾𑌃 𑌸𑌮𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌶𑍍𑌚 । 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌨𑍍𑌯𑌮𑌵𑌗𑌮𑍍𑌯 𑌤𑌦𑌰𑍍𑌪𑌿𑌤𑌾
𑌨𑌿 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌪𑌰𑌿𑌪𑌾𑌕𑌫𑌲𑌾𑌨𑌿 𑌧𑌨𑍍𑌯𑌾𑌃 ।

ஸத்குருக்களுடைய உபதேசங்களாலும் சாஸ்திரார்த்த விசாரங்களாலும், விஷயங்களில் பற்றுதலை நீக்கிய ஞானவான்கள்' மனிதர்களைப் பந்தத்தில் கட்டுப்படுத்தும் திறமை வாய்ந்த நான், என்னுடையது என்கிற இவ்விரண்டு பதங்களையும் விட்டுவிட்டு அதாவது அகங்காரம் மமகாரம என்பவைகளை விலக்கி என்று பொருள். எவ்வித பந்தத்திற்கும் இவையே முக்கியகாரணங்கள். பிறகு ஒருவர் தம்மை புகழ்ச்சியாகப் பேசினாலும் இகழ்ச்சியாக மொழிந்தாலும் வேறு எவ்விதமான மானவமானங்கள் நேர்ந்தாலும் அவைகளால் வேற்றுமையை அடையாமல் ஒரே நிலைமையிலிருப்பவர்களாயும்

शुनिचैव श्वपाकेच पण्डितास्समदर्शिनः ।

𑌶𑍁𑌨𑌿𑌚𑍈𑌵 𑌶𑍍𑌵𑌪𑌾𑌕𑍇𑌚 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌸𑍍𑌸𑌮𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 ।

என்று சான்றோர் சாற்றுக்கிணங்க ஏழை, பிறபு, ராஜா அதிகாரி, என்கிற பேதத்தைவிட்டு ஸகலப்ராணிகளையும ஒரே ஈசுவர ஸ்வரூபமாகப் பார்க்கிறவர்களாயுமிருந்துகொண்டு கர்மாவைச் செய்யுங்காலத்தில் இதற்குக் கர்த்தா வேறு. பலனளிப்பவன் வேறு. நாம செய்யமாத்திரம் கடமைப்பட்டிருக்கிறோம். வேறு ஒருவித சம்பந்தமும் நமக்கு இங்கு இல்லை என்கிற எண்ணத்துடன் தமக்குற்ற கர்மாக்களைச்செய்து பகவானுடைய அனுக்கிரகத்தைப் பெற்று ஜன்மஸாபல்யத்தையும் அடைகிறார்கள்.

ஸகல ஜனங்களும் அகங்காரம், மமகாரம் என்று பெயர் பெற்ற மிககொடியதான இவ்விரண்டு பூதங்களால் ஆக்கிரமிக்கப் பட்டு விவேகம்குன்றி பாபபுண்யங்களையறியாமல் தோன்றியவாறு கார்யங்களை நடத்திப் பலவாறான கஷ்டங்களுக்குள்ளாகிறார்கள். ஆகையால் அப்பூதங்களை ஸதகுருக்களுடைய உபதேசமாகிற மந்திரோச்சாரணத்தால் விலக்கவேண்டியது முக்கியம்.

உபபத்திராதிபர்

ஆர்யதர்மம்.
பிரபவஹு ஆடி-மீ ௨௭௳

# கலிகால தர்மோபதேஷ்டாக்கள்.

(418-வது பக்கத்தொடர்ச்சி)

ஆனால் இக்காலத்தில் விதிப்படி ஸரியாய் நடத்தமுடியாமலிருப்பதைக்கொண்டு சிலகாரியங்கள் கௌணமாய் நடைபெறலாம். அதல்லாமல் விதியைவிட்டுத் தம்மிஷ்டம்போல் நடத்துவதில்லை விதவாவிவாகவிஷயத்தில் விதியை கவனித்தால் அற்பம்கூட இடம் கொடுக்கவில்லை. விவாகத்தைக் கூறுமிடத்தில்

अविप्लुतब्रह्मचर्यो लक्षण्यां स्त्रियमुद्वहेत् ।
अनन्यपूर्विकां कान्तामसपिण्डां यवीयसीम् ॥ याज्ञवल्क्यः ।

𑌅𑌵𑌿𑌪𑍍𑌲𑍁𑌤𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑍋 𑌲𑌕𑍍𑌷𑌣𑍍𑌯𑌾𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌮𑍁𑌦𑍍𑌵𑌹𑍇𑌤𑍍 ।
𑌅𑌨𑌨𑍍𑌯𑌪𑍂𑌰𑍍𑌵𑌿𑌕𑌾𑌂 𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌮𑌸𑌪𑌿𑌣𑍍𑌡𑌾𑌂 𑌯𑌵𑍀𑌯𑌸𑍀𑌮𑍍 ॥
𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃 ।

பிர்ம்மசர்யவிருதத்தை நன்கு அனுஷ்டித்தஒருவன் அங்கங்களில் குறைவில்லாதவளும் ஸபிண்டையாகாதவளும் வயதால் குறைந்தவளும் முன் ஒருபதியையடையாதவளும் அழகுவாய்ந்தவளுமான ஸ்திரீயை மணம்புரியவேண்டுமென்று யாக்ஞவல்க்யர் கூறியிருக்கிறார். இங்கு अनन्यपूर्विकां 𑌅𑌨𑌨𑍍𑌯𑌪𑍂𑌰𑍍𑌵𑌿𑌕𑌾𑌂 என்கிற பதத்தால் விதவையை விவாகம் செய்யக்கூடாதென்று ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கின்றது. இதுஸம்பந்தமாயுள்ள பல பிரமாண வசனங்களும் பராசரர் ஸ்மிருதியில்

नष्टे मृते प्रव्रजिते क्लीबे च पतिते पतौ ।
𑌨𑌷𑍍𑌟𑍇 𑌮𑍃𑌤𑍇 𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑌿𑌤𑍇 𑌕𑍍𑌲𑍀𑌬𑍇 𑌚 𑌪𑌤𑌿𑌤𑍇 𑌪𑌤𑍌 ।

என்கிற வசனத்தில் விதவாவிவாகத்திற்கு ஆதாரமிருப்பதாகச் சிலர் கூறுவது. சாஸ்திர வாஸனையே இல்லாத அக்ஞர்களு

கூடிய பிதற்றலென்றும் அநேக மேற்கோளுடன் ஆர்யதர்மம் 11ஆவது ஆண்டு வெளிவந்த புஸ்தகத்தில் விஸ்தாரமாக எம்மால் வரையப்பட்டிருக்கின்றபடியால் மீண்டும் இங்கு அதை விரிக்க வேண்டாமென்று விடுத்தனம். விதவாவிவாகமென்றால் அதின் கருத்தென்ன. அவளை விதிப்படி விவாகம்செய்துகொள்ளுகிறதா, அல்லது சில ஜாதியாரைப்போல் ஷேகன் மோதிரம் முதலானவைகளைக்கொடுத்து அழைத்துக்கொள்ளுகிறதா, கன்யாவிவாகத்திற்கில்லை. அந்த விதியையே இங்குபயோகப்படுத்துவது மிகவும் தவறேயாகும். அது சாஸ்திரீயமாகாது. தேசாந்திரங்களிலுள்ளவர்கள் கிரகித்துக்கொள்வதுபோல் சாஸ்திரசம்பந்தமில்லாமல் தோன்றியபடி எப்படியாவது கிரகித்துக்கொள்ளவேண்டும். அப்படி கிரகித்துக்கொண்டால் அதைச் சாஸ்திரீயமான வைதிகவிவாகமென்று எவரும் கூறுவதற்கிடமில்லை. இந்துக்களுக்கு முக்கியமாய் பல வைதிக தர்மங்கள் நடைபெறவேண்டியே விவாகமென்கிற கர்மா ஏற்பட்டிருக்கின்றது. விதிக்கு மாறுதலாகக் கேவலம் போகத்தையுத்தேசித்து மாத்திரம் கிரகிக்கப்பட்ட இந்த ஸ்திரீகள்ஸஹபோஜனம் முதலிய ஸாமான்யகார்யங்களுக்கே அருகமில்லாமலிருக்கும்போது வைதிககர்மாவென்கிற வார்த்தையைக்கூட உச்சரிக்க இவர்களுக்கு யோக்கியதையில்லை. மேலும் இந்த ஸ்திரீகளிடம் ஜனிக்கும் புத்திரர் முதலானவர்களுக்கு அவ்வக்காலத்தில் செய்யவேண்டிய வைதிக ஸம்ஸ்காரங்களைச் செய்யவும் சாஸ்திரம் இடம் கொடுக்காது. அவனால் தம் பிதாவையுத்தேசித்துப்பொருள் சிலவாலும் சரீர சிரமத்தாலும் செய்யப்படும் வைதிககர்மாக்கள் சாம்பலில்செய்த ஆகுதிபோல் வீணேயாகும். இது இவ்விதமிருக்க அவளைப்பற்றி விசாரித்தால் அதுவும் பலவித கஷ்டங்களுக்கே காரணமாகுமேயன்றி உசிதமென்று சொல்லமுடியாது. விதவைக்கு மறுமணம் செய்கிறதென்று ஏற்பட்டால் சாஸ்திரம் அற்பங்கூட அதற்கு இடங்கொடுக்கவில்லை என்பது நிச்சயம். அதைமீறி நடத்தினால் இரண்டாவது புருஷனும் தவறிவிட்டால் மறுபடியும் வேறு புருஷனை இவள் பதியாக அடையவேண்டும். இவ்விதம் 3, 4 நேர்ந்தாலும் இவளுக்குப் போகத்தில் இச்சையுள்ளவரையில் விவாகம் செய்துகொள்ளலாமென்று விதவாவிவாகக்காரர்கள் அங்கீகரிக்க வேண்டும். விஷயசுகத்தையனுபவிக்காமல் விதவைகளின் ஜன்மம்

வீணாகப்போய்விடுகிறதே என்று அவர்களிடம் கருணைபெருகி எவ்வித தோஷத்தையும் கவனியாமல் தைர்யமாய் இந்தக்கார்யத்தைச்செய்ய முன்வருகிறவர்கள் மத்தியில் கூடாதென்று தடுக்க எப்படித்துணியலாம்.

உபபத்திராதிபர்

---

# ஸ்ரீ வியாஸபூஜா வைபவம்.

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகளது சாகையாக சென்னை தம்புசெட்டி வீதியில் அமைந்திருக்கும் ஸ்ரீமடத்தில் 14—7—27 குருவாரம் ஸ்ரீவ்யாஸ பௌர்ணமியை முன்னிட்டு அன்று காலையில் பல வைதிகர்கள் மஹன்யாஸ பூர்வமாக ஏகாதச ருத்ரபாராயணம் செய்தனர். ஸ்ரீமதாசாரிய பிம்பங்களுக்கும் ஆவாஹநம் செய்யப்பட்ட ஸ்ரீவேதவ்யாஸாசாரியாளுக்கும் வேதோக்த அபிஷேகம் நடந்தது. ஆசார்ய ஸஹஸ்ரநாமார்ச்சனையும் தூபதீபாதி உபசாரங்களும் மந்திர புஷ்பமும் நடைபெற்றது. பக்தர்களுக்கு வ்யாஸாக்ஷதையும் ப்ரஸாதமும் வழங்கப்பட்டது.

ஸாயங்காலத்தில் பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ. வெ. ஸோமதேவ சர்மா அவர்கள் ஸ்ரீ வ்யாஸாவதாரம் என்பதைப்பற்றி விரிவாக ஒருமணிஉபன்யஸித்தார்கள் படிப்பில்லாமல்தானாகஇரண்டொன்றைக் காதால் கேட்டு வித்வான்களைப்போல் தற்காலத்தவர் வ்யாஸர் சம்படவக்கன்யகையின் புத்ரர் என்றும் மற்றும் பலரிஷிகள் சண்டாளர் முதலிய ஜாதியில் பிறந்ததால் ஜாதியில் வேற்றுமையில்லையென்றும் ஒரே பிறவியில் எந்த மேல்ஜாதியை வேண்டுமானாலும் பெறலாமென்றும் சொல்கின்றனர். ஆழ்ந்து வேதசாஸ்திரங்களைக்கற்ற ஒருவரும் இதை ஆதரிக்கமாட்டார். மஹாபாரதத்தை ஆதியோடந்தமாகப் பார்க்கும்போது சம்படவன் வளர்ப்பிற்குமாத்திரம் காரணமாயிருந்தானென்றும் உபரிசரவசு என்பவரது ரேதஸ்ஸை ஒரு கழுகு அவர் மனைவிக்குக் கொண்டுபோகும்போது மற்றோர் கழுகு மாம்ஸமென்றெண்ணி அதைத்தடுக்க ரேதஸ் கீழே விழுந்தது. அதை ஓர்மீன் விழுங்க அம்மீன் ஓர்

பெண்ணேயும் புத்ரனேயும் பிறப்பிக்க புத்ரனேத்தந்தையும் பெண்ணே வேடராஜனும் வளர்த்தனர். பராசரர் தனது தீர்த்தபாத்திரத்தை ஐநூறு மனிதராகவும் தன்னே ஐநூருகவுமாக்கி ஓடத்தை ஓட்டச் சொல்லி இடையே அப்பெண்ணின் ஜன்மாந்திரக்கதையைக்கூற பித்ருதேவர்கள் வந்து கன்யகாதானம் செய்ய வஸிஷ்டரும் அருந்ததியும் யாக்ஞவல்க்யரைக்கொண்டு விவாஹம்செய்விக்க உடனே எழுவயதில் முனிவேஷத்துடன் வியாஸர் க்ஞானசக்திப் பிரதானமாக அவதரித்துத்தந்தையின் உத்திரவுப்படி தாயை வற்றுப்பணிந்து நினேத்தவுடன் வருவதாகக்கூறிச் சென்ருரென அழகாகஉபன்யஸித்தார். அவருக்கும் பக்தர்களுக்கும் ப்ரஸாதம் வழங்கி 8 மணிக்கு சபை கலேந்தது.

R. சுப்பிறமணிய அயயர்.

---

# ஆன்ஹிக க்ரமம்.

தற்காலத்திற் தோன்றிய ஒரு சில மேதாவிகள் வேதத்தில் விக்ரஹாராதனே கிடையாதெனக் கூறி கொஞ்சமாயுள்ள பக்தியையுங் கெடுத்து விடுகின்றனர். அது முற்றிலும் தவறு. கற்சிலேயாகத் தோன்றிய கடவுளே பஜிக்கிறேன் என யஜுர்வேதத்தில் கூறப்பட்டுள்ளது விக்ரஹாராதனம, அதைப் பிரமாணமாகக் கொண்டு தர்மநூல்களும் ஆகமங்களும் தோன்றின. அக்னியில் பிராமணருக்கும் ஹிருதயத்தில் யோகிக்கும் பிம்பத்தில் (ஆத்ம)க் ஞானமில்லாதாருக்கும் எங்கும் ஸமதர்சிகளுக்கும் கடவுள் உளர் என்பது தர்மநூலின் ஸித்தாந்தம். தன்னேத்தானே அறிவாளி என நினேத்து தேவதாராதனம் செய்ய மறுத்தாலும் கீழ்க்கண்டவைகளிலும் ஏதேனும் ஒன்றைக் கைப்பற்ற வேண்டும். ஒன்றும் செய்யாது வாயளவோடு வேதாந்தம் பேசுபவர் நமது சிக்ஷைக்காளாவர். மற்றும் சிலரோ “कलौसंकीर्त्यकेशवं கலௌஸங்கீர்த்ய கேஶவம் என்பதை மாத்திரம் ப்ரமாணமாகக் கொண்டு ஸகல வைதிக கர்மாக்களிலும் அச்ரத்தைகொண்டு பஜனே ஒன்று செய்தால் போதுமென சில பாட்டுக்களேப் பாடி ஸந்தியாவந்தனத்தைக் கூட காலத்தில் செய்யாமலிருக்கின்றனர்

அதுவுந்தவிர ஸ்வதர்மத்தை விட்டவன் எக்கார்யத்திற்கும் தகாத பதிதனுவன். संध्यावन्दन भद्रमस्तुभवते ஸாயம்ப்ராவஹ நமஹ்ஸ்து ஹவிதே ஸந்தியாவந்தனமே உமக்கு மங்களம், நீர் போய்வாரும் என்பதுபோன்றவைகள் கேவல அர்த்தவாதம் என உணரவேண்டும். பழுத்த ஞானியானுலும் பக்தரானுலும் உலக நன்மைக்காக வேனும்ஸ்வதர்மத்தைக் கைப்பற்ற வேண்டுமென்பது கீதாசாரியரது கட்டளையாகும். ஆதலால் ஸ்வதர்மாசாரங்களை விடாமல் மற்றவைகளை அநுஷ்டிக்கவேண்டும். பரமபக்தசிகாமணிகளெல்லோரும் அங்ஙனமே அனுஷ்டித்து வந்தனர்.

## வைச்வதேவம்,

மாத்யான்ஹிக பூஜைகளுக்குப் பிறகு அனுஷ்டிக்க வேண்டியது இக்கர்மா. ஸகல தேவதைகளையும் ஆராதிப்பதால் இதற்கு வைச்வதேவம் எனப்பெயர். பஞ்சயக்ஞம் எனவும் மற்ரோர்பெயருண்டு. இதற்கு தேவயக்ஞம், பிதிருயக்ஞம், பூதயக்ஞம், மனுஷ்யயக்ஞம், ப்ரும்மயக்ஞம் என ஐந்து மஹாயக்ஞங்களிருப்பதால் பஞ்சமஹாயக்ஞம் எனப்படுகிறது. ஆத்மாவும் அன்னமும் சுத்தமாவதற்காக இதை அனுஷ்டிக்க வேண்டும். பிரதிதினம் தடுக்க முடியாமல் ஐவகைக் கொலைபாதகத்தை நாம் செய்கிரோம். (1) நெல் முதலிய தானியங்களை உலக்கையுரலால் இடித்தும் காய் கரிகளை நறுக்கியும் அதிலுள்ள ஜீவனை முளைக்கவிடாமல் வதை செய்து ஆநந்தமாக புஜிக்கிரோம். நாம் கொல்லாவிடில் அவைகள் முளைத்து அனேக தான்யங்களை உண்டுபண்ணும். அவைகளைப் புஜிக்காமல் நாம் பிழைத்திருப்பது அரிது. ஆதலால் அன்றன்று இப்பாதகத்தைச் செய்யாமலிருக்க முடியாது. (2) அமிக் குழவிகளால் கொத்தமல்லி மிளகாய் ஜீரகம் முதலிய ஜீவன்களைப் பொடிபண்ணுகிரோம். புஜிக்கிரோம்.

அடுப்பு மூட்டாமல் ஒரு நாள் கூட ஜீவித்திருக்க முடியாது கட்டைகளையண்டி எத்தனை ஜீவராசிகள் பிழைக்கின்றன. அக்கட்டையை வெட்டாவிடில் அஃதோர் மரமாகி பல விதைகள் மூலம் எண்ணிறந்த மரங்களை உண்டு பண்ணுமல்லவா? அன்றியும் நாம் இளங்கீரைகளையும் கரிகாய்களையும் ஆவலுடன் உண்கிரோமல்லவா? அதனுள்ளே ஜீவநாடி ஓடுவதையும் தன்னைக் கொல்லவருபவனைக் கண்டு துக்கிப்பதையும் ஜலம் விட்டு லாலனை

செய்பவனைக் கண்டு நன்றியுடன் ஸந்தோஷிப்பதையும் ஸ்தூலக்கண்ணால் காணும்படி ஸ்ரீமான் ஜகதீச சந்திரவசு என்ற வங்காள வித்வான் காட்டவில்லையா. ஆதலால் செடிகொடிகளைக் கொல்வது மூன்றாங் கொலையாகும். (4) முகக்கண்ணால் காண முடியாமல் ஸூக்ஷ்மதர்சிக் கண்ணாடியால் காணத்தக்க அளவிறந்த க்ருமிகள் ஜலத்திலிருப்பதை யாரே அறியாதார்? நாமுட்கொள்ளும் ஜலத்தில் மாளும் ப்ராணிகளுக்கு கணக்கேயில்லை. ஜலத்தை உட்கொள்ளாமல் தானிருக்க முடியுமோ? கை கால் கழுவும் போதும் மற்ற காரியங்களிலும் பற்பல ஜீவராசிகள் உயிர் துறக்கின்றன. இது நாலாவது கொலையன்றோ? (5) முறத்தால் புடைப்பதாலும் துடப்பத்தால் பெருக்குவதாலும் சாணமிட்டு வீட்டை மெழுகுவதாலும் காலால் நடக்கும்போது கண்ணுக்குத் தெரியாத பற்பல ஜீவராசிகளை வதைக்கிறோமல்லவா? இது ஐந்தாம் கொலை.

இவ்வைந்துகளாலுமுண்டான பாபத்தை யகற்றவே பஞ்சமஹாயக்ஞங்களைச் செய்யும்படி விதிக்கப்பட்டிருக்கிறது இதை க்ரஹ்யாக்னி அல்லது பாகாக்னியில் செய்ப வேண்டும். சிற்சில ஸமித் ஹோமங்களைச் செய்தபிறகு அக்னியின் அருகில் பலி வைக்கவேண்டும். தர்மம் அதர்மம் முதலிய ஸகல தேவ மநுஷ்ய பித்ரு பூதப் ப்ரும்மாக்களும் அவரினத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஆக சுமார் முப்பத்தெட்டு சிறுசிறு பலிகள் அததற்குக் குறிப்பிட்ட விடத்தில் விசிரியைப்போல் வைக்கவேண்டும். பிறகு இதன் அங்கமாக ஸிம்ஹாநுவாகம் என்ற மந்திரபடனம் செய்ய வேண்டும். இம்மந்திரார்த்தம் வெகு ருசியாயிருக்கும். நமது இன்னின்ன பாபம் இன்னின்னவரிடம் செல்லட்டும் என்று கூறுவது மிகப் பொருத்தமாயிருக்கும். இவ்வைச்வதேவ கர்மா வேதோதிதமான பாபத்தையகற்றும் கூச்மாண்டஹோமம் என்பதை மூன்று நாள் அநுஷ்டித்துப் பிறகு, தக்க குரு மூலமாக உபதேசம் பெறவேண்டும். இரண்டு வேளை யிது அநுஷ்டிக்கத் தக்கதெனினும் இரவில் அதிஸங்க்ரஹமாகயிருக்கும் ச்வானபலி ஒன்றே விதிக்கப்பட்டுளது. ஆரம்பமுதல் அரைமணிக்குள் இதை முடித்துவிடலாம். அவசரமான காலத்திலும் அஸந்தர்ப்பமான விடத்திலும் இதற்கு பதில் தர்ப்பணம் செய்துவிடும்படியும் விதி

யுண்டு என்பதால் இக்கர்மா எவ்வளவு அவசியம் என்பது சொல்லாமலே விளங்குமன்றோ ? யக்ஞத்தில் வேதவிஹிதமான பசுவதம் (வதமல்ல) செய்வதை மிகப் பாபமென வாய்க் கூசாமல் பேசும் வம்பர் வளர்ந்த இக்காலத்தில் சாஸ்திரவிருத்தமான விதவாவிவாஹம் ருதுமதீ விவாஹம் தீண்டாதாரைத் தீண்டுதல் ஜாதியை யழித்தல் முதலிய அதர்மங்களில் காருண்யமென்றும் பசுந்தோலைப் போர்த்து மாயக்கண்ணீர் வடிக்கும் கலிபுருஷர்கள் மஹரிஷிகள் ஸகலப்ராணிகளிடத்திலும் காட்டிய ஜீவகாருண்யத்தைக் கவனிப்பாரா ? தாங்கள் தினந்தோறும் செய்யும் கொலைக்குமனம் வருந்துவாரா ? அதற்குப் பிராயச்சித்தமான பஞ்சமகா யக்ஞம் செய்வாரா? உதட்டோடு கருணை காட்டி நிற்பாரா? அல்லது இவைகளைக் கொல்லாது உணவின்றிதான் இருப்பாரா ? குறைந்த பக்ஷம் தான் அனுஷ்டிக்காவிடினும் இதையுணர்ந்து அனுஷ்டிக்கும்படி விதித்த வேதத்தையும் தர்மநூல்களையுமாவது கவனிப்பாரா ? கௌரவிப்பாரா ?

## அதிதி பூஜை.

அதற்கடுத்தபடி வாயற்படியண்டை பசுவைக் காக்கும் காலம். யாரேனும் அதிதி வருகிறாரா என்று எதிர்பார்க்க வேண்டும். ஒரு நாளைக்குமேல் இல்லாதவரே அதிதி எனப்படுவர். ஸர்வ யோகயதையும் ஆசாரமுமுள்ளவர் உத்தமராவர். ஸாமான்யமாயிருந்தாலும் ஸமயத்தில் வந்தவர் எவரெனும் அதிதியாவர். உள்ளூரில் திரிபவர். சோம்பேரிகள். சூதாட்டக்காரர். அனுஷ்டானமில்லாமல் சீட்டாட்டம். பரநிந்தை பொய்சாக்ஷி கோள்ச் சொல்லல் முதலிய துர்குணமுள்ளவர் அதிதியாகார். நற்குணம் வாய்ந்த அதிதியைத்தெய்வமாகப் பாவித்து பூஜிக்கவேண்டும். இல்லையேல் அவர் செய்த பாபமனைத்தையும் நமக்குக்கொடுத்து விட்டு அதிதி பூஜை செய்யாத நம்மிடம்ஏதேனுமிருந்தால் அந்தப் புண்யத்தையும் அபகரித்துச் செல்வார். அன்றியும் ஆயுள் குறையும். நமக்குக் கிட்டியதில் சிறிதாவது அதிதிக்கிட்டு பின் நம் வயிற்றைக் கவனிக்கவேண்டும். அவரவர் செல்வததிறகேற்றபடி உபசரிக்கவேண்டும். தனக்கு உஞ்சவிருத்தியினால் கிடைதத அல்ப ஆஹாரத்தையும் அதிதிககளிதத உத்தமரது சரிதம பல புராணங்களில் காணப்படுகின்றன. விருந்தளிப்பதில் நிக

ரில்லாதது நம் தேசம் எனத் தற்காலத்தவரும் முற்காலத்தவரும் போற்றுகின்றனர்.

தற்காலக் கல்விக் கேட்டாலும் எழ்மையாலும் டாம்பீக வழக்கத்தாலும பசியென்று வந்தவரைக்கூட அங்குபோ வேலேயில்லையா ? கஷ்டப்பட்டுப் பிழை என பல தீயச் சொற்களால் தர்மோபதேசம் செய்யப் பலர் துணிகின்றனர். ஏதோ ஒரு காரணத்தைக் கொண்டு தகாதவரை அழைத்து ராஜோபசாரம்செய்கின்றனர், இரண்டுந்தீதே. இவ்விரண்டாலேயே பற்பல தொல்லைகள் நேருகின்றன. ஆதலால் சாஸ்திரவிதி தவாமல் கூடுமானவரை அதிதி பூஜை செய்யவேண்டும்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

---

# வர்ணாசிரம தர்மம்.

இத்தலையங்கத்துடன் 25—7—27ல் வெளியான மித்திரன் பேபரில் பங்களூர் நிருபர் எழுதியிருக்கும் விஷயத்தைச்சற்று கவனிக்கவேண்டிய ஆவசியகம் நேருகிறது.

இதில் 20ம் தேதியன்று மைசூரில் 12000 ஜனங்கள் கூட்டத்தின் நடுவில் 6 உபசாரப்பத்திரங்கள் காந்திக்குக் கொடுக்கப்பட்டனவாம். அதில்ஆதித்திராவிடர்களின் உபசாரப்பத்திரத்திற்குப் பதிலளித்தது அடியில் வருமாறு என்று காந்தி கூறியதை நிருபர் நிருபிக்கிறுர். இதைத்தான் நாம் கவனிக்கவேண்டும். முதலாவது

1. ஹிந்து ஸமூகமானது ஒரு ஹிந்துவையாவது தூர விலக்கிவைததிருக்கும்வரையில் நானும என்னை ஒரு தீண்டப்படாதவனுகவே பாவித்து நடந்துவருவேன என்பதே. இங்குஇவ்வார்த்தைக்கூறும் காந்தி சாஸ்திரரீதியானவியவகாரமாய்க் கேட்கிறுரா அல்லது லோகரீதியிற் கேட்கிறுராஎன்பதை முதலில அறியவேண்டும். சாஸ்திரரீதியில் இவரது வசனம் ஏற்படவில்லையென்பது வெளிப்படைதான். ஏனெனில் இவரது வியவஹாரம் எப்போதும் சாஸ்திரார்தத்தைக்கடந்து நிற்பதுதான். லோக வியவகாரத்திலேயே ஈடுபட்டிருப்பதால் அதொன்றுலேயே ஸர்

வஸித்திபெற முயற்சிக்கிறார், சாஸ்திர வியவகாரத்தைவைத்துப் பேசுவதானால் முதலில் இவ்வசனம் கிளம்பவே நியாயமிராது. ஏனெனில் சாஸ்திரத்தில் தனக்கு உயிர் தோழியான மனைவியையும் மக்களையும் பந்துக்களையும் கிட்டவராதே என்று ஒரு ஸமயத்தில் விலக்கவேண்டுவதாயிருக்கும். இன்னும் அனுஷ்டானத்திலிருப்பது அனுபவமே ஆகவே இனிலோகரீதியிற் பேசியிருப்பாராவெனில் அதுவும் பொருந்தவில்லை. ஏனெனில் என்னை ஒரு தீண்டாதவனாகப் பாவித்து நடந்து வருவேனென்கிறார். தீண்டாமை என்பது சாஸ்திர வியவகாரமேயொழிய லௌகிகந்தியில்லை. இவ்விதம் இரண்டுமில்லையென்றாலும் ஏதாவதொன்றில் சேர்க்கவேண்டுமாதல்பற்றி சாஸ்திர வியவகாரத்தையே மனதில் வைத்துப் பேசுகிறாரென்று தீர்மானம் கொண்டு இங்கு சாஸ்திர ரீதியில் நாம் ஆலோசித்தது பதில் கூறுவாம். அவ்வித சாஸ்திரத்தை அலக்ஷ்யம்செய்து பேசுபவர்கள் நாஸ்திகர்களென்றும் அவர்கள் பேசக் கூடத் தகுதியற்றவர்களென்றும் சாஸ்திரமே கூறியிருப்பதால் தன்னையும் தீண்டாதவனாகப் பாவிப்பேனென்பது சாஸ்திரப்படி நியாயந்தானென்று ஆஸ்திகர்கள் ஏற்பார்களென்று தோன்றுகிறது, ஆகவே அவர் அவ்விதம் பாவிப்பது நியாயமே.

2 இனி இரண்டாவது தீண்டாமை என்னும் கொடிய வழக்கமானது இந்து ஸமூகத்திலிருந்து அகல்வதற்கு முன்னால் ஸ்வராஜ்யம் ஸித்திக்குமென்று என் மனதிற்குத் தோன்றவில்லைஎன்று இதற்கு நான் நம் பத்திரிகை மூலமாக அடிக்கடி தெரிவிப்பதை மீண்டு முறைக்க நேரிடுகிறது. தீண்டாமையென்பது நல்ல சாஸ்திரஸம்மதமான வழக்கம். அது கொடிய வழக்கமே இல்லை, அது அகல்வதற்கு முன்னால் ஸ்வராஜ்யம் ஸித்திக்காது என்பது உண்மை. வர்ணாசிரமதர்மம் உலகில் இருக்கும்வரை காந்தி நினைக்கும் ஸ்வராஜ்யம பூஜ்யம் தான். அத்தகைய ஸ்வராஜ்யத்தை ஆஸ்திகர்களான இந்துக்கள் விரும்பமாட்டார்கள். ஏனெனில் காந்தி நினைக்கும் ஸ்வராஜ்யம் இந்துக்களையழித்துக் கொலைக்களத்திலும் ஜயிலிலும் கொண்டு நிறுத்திவிடும்.

3 ஒரு வர்ணத்தைச் சார்ந்தவர் மற்றொரு வருணத்தாரைவிட உயர்ந்தவரென்று சொல்லவில்லை என்கிறார். இது உண்மை.

அவ்விதம் கூறவே இல்லை. ஆனால் ஒருவன் மூத்தவன் அடுத்தவன், 3 வதுவன் என்று அண்ணன் தம்பி முறை கூறியிருக்கிறது. அண்ணன் தம்பி முறை முற்காலத்தில் எவ்விதமிருந்ததென்பதை ராமாயண பாரதாதிமூலமறிய முடியாவிடினும் இக்காலத்திலும் எவ்விதம் நடைபெற்று வருகிறதென்பதை கவனித்தால் இவ்வசனம் கிளம்பி இராதென்பதே எண்ணம்.

4 ஒவ்வொரு வருணத்தாருக்கும் ஒவ்வொரு தர்மம் விதிக்கப்பட்டிருக்கிறது. அப்படி விதிக்கப்பட்ட தர்மத்தை அந்தந்த வர்ணத்தார் செய்யும்போது அம்மட்டில் அவர்கள் உயர்ந்தவர்களாகிறார்கள். பிராமணனுக்குச் சில தர்மங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை அவன் சரிவர நிறைவேற்றும்போது அவற்றில் அவன் உயர்ந்தவனாகின்றான் என்கிறார். இது மிகவும் சாஸ்திர ஆதாரப்பேச்சாய் இருக்கிறது. இந்த இவர் சொல்வதைச் சற்று விஸ்தரித்துப் பார்த்தால் முன் பின் புரள நேராது. ஒவ்வொரு வருணத்தாருக்கும் ஒவ்வொரு தர்மம் விதிக்கப்பட்டிருக்கிறதென்றதனால் அனுஷ்டிக்கத்தமான வர்ணத்திற்கு சாஸ்திரப்படி ஏற்பட்ட தர்மம் அவனவனுக்குத் தனித்தனி இருக்கிறதென்றும் அவனவன் அவனவனுக்கு ஏற்பட்ட தர்மத்தைத் தான் அனுஷ்டிக்கக் கடமைப் பட்டிருக்கிறானென்றும் இன்னொருவன் மற்றவனுடைய தர்மத்தை அனுஷ்டிக்கவேகூடாதென்றும் அப்படி அனுஷ்டிப்பவன் இக பர பலனை அடையமாட்டானென்ற கீதாதாத்பர்யத்தையும் காந்தி நன்கு வெளியிட்டவராகிறார். இவ்விதம் தன் தனக்கு ஏற்பட்ட தர்மத்தை அனுஷ்டிப்பவன் அம்மட்டில் மேலானவன் தானென்பது தர்ம்மவியாதருடைய சரித்திரத்தை பலப்படுத்துகிறது.

ஆகவே இம்மட்டும் சாஸ்திர ஸம்மதமே. இனிமேல் கவனிப்பாம். இவ்விதம் தத்தம் தர்மங்களைச் செய்வதில் உயர்வுதாழ்வு எங்கிருந்து வருகிறதென்பது எனக்குத் தெரியவில்லை என்கிறார். இவ்விஷயத்தினால் உயர்வு தாழ்வு எங்கிருந்து வருமென்று எங்களுக்கும் புலப்படவில்லை.

5 வர்ணாசிரம தர்மம் ஸமுதாயநலத்தை ரக்ஷிப்பதற்காக ஏற்பட்டதேயன்றி ஒரு ஸமூகத்தார் மற்றொரு ஸமூகத்தாரை ரக்ஷிப்பதற்காக ஏற்பட்டதல்லவென்கிறார். இங்கு அர்த்த வித்

யாஸம் தோன்றவில்லை. ஒரு ஸமயம் மற்றொரு ஸமூகத்தாரை ரக்ஷிப்பதற்காக ஏற்பட்டதல்லவென்றிருக்க வேண்டுமோயாதோ அவ்விதமிருந்தால் அது ராக்ஷஸ தர்மம் மானிடதர்மமல்ல. வர்ணாசிரமதர்மம் ஏற்பட்டது ஸமூகாய நலத்தை ரக்ஷிப்பதற்கு மட்டுமல்ல பதினொன்கு உலகிலுள்ள ஜீவராசிகளுடன் போக்குவரத்துடன் பழகவும் எல்லாம் கடந்த இறைவனைத் தோழனாக்கவும் இன்னும் மேற்போனாலவனைச் சேருபவனாகக்கூட ஆக்கவும் வல்லமையுள்ளதாய் ஏற்பட்டிருக்கிறது.

6 தனது நாயும் தன்னுடன் தொடர்ந்து வர அனுமதிக்கப்பட்டாலன்றி ஸ்வர்க்கத்திற்குள் நுழையமாட்டேனென்று பிடிவாதம் செய்த தர்மபுத்திரருடைய கொள்கையைஒவ்வொரு இந்தியனும் பின்பற்றவேண்டுமென்று கோருகிறேன் என்கிறார். இதிற் கூறவேண்டியதை சற்று விஸ்தரித்துக் கூறவேண்டியிருக்கிறது. கூறத்தான் வேண்டுமாதல்பற்றி விளக்குகிறேன். இங்கு காந்தி இந்தக் கதையை இப்படித்தான்கேள்விப்பட்டிருக்கிறாரோ அல்லது ஒன்றும் தெரியாத ஏழை ஜனங்களை ஏமாற்றக்கூறுகிறாரோவென்று நிச்சயிக்க முடியவில்லை. இதைக் கேட்கும் ஸாமான்ய ஜனங்கள் ஏதோ தர்மபுத்திரர் நாய் வளர்த்ததாகவும் அவர் ஸ்வர்க்கத்திற்கு அதைக் கூட்டிப்போனதாகவும் அங்கு நாயை உள்ளே விடமாட்டேனென்று சொன்னதில் அவர் பிடிவாதம் செய்ததாகவும் வாயிற்காப்போன் விட்டுவிட்டதாகவும் அர்த்தம் கொண்டு ஏமாறுவார்கள். அவ்விதம் ஏமாறுவண்ணம் உண்மைக் கதையை இங்கு உரைக்கின்றேன்.

தர்மபுத்திரர் ராஜ்யத்தில் ஜநமேஜயரை வைத்துவிட்டு இனி பூலோக வாஸம் வேண்டாமென்று வெளிப்புறப்பட நிச்சயித்துத்தனது ஆபரணங்களையெல்லாம் கொடுத்துவிட்டு மரஉரி தரித்து அக்னியையும் ஜலத்தில் போட்டுவிட்டுப் புறப்படத் தயாரானார். அவ்விதமே தன் தம்பிமார்களும் த்ரௌபதியும் ஸம்மதித்து அதேவேஷத்தைத் தரித்துப்பின்தொடர்ந்தனர். ஆக இவர்கள் 6பெயர்கள்மட்டும் பின்தொடர்ந்தனர். ஒரு நாயும் வந்தது. அவ்விதம் இவர்கள் சேர்ந்து வடதிசையில் இமயமலை தாண்டி வெகுதூரம் செல்லும்போது முதலில் த்ரௌபதி விழுந்து விட்டாள். பீமன் இதைப்பார்த்து அண்ணா த்ரௌபதி விழுந்து

விட்டாளே என்றார். தர்மபுத்திரர் பீமா அவள் நம் எல்லோரிடத்தும் சமமாக இருக்கவேண்டியிருக்க அர்ஜுனனிடத்தில்மட்டும் விசேஷ அபிமானம் செலுத்திவந்தாள். அந்தப்பாபத்தால் அவள் விழுந்தாளென்று சொல்லிக்கொண்டு சென்றார். பிறகு க்ரமமாய் சகதேவன், நகுலன், அர்ஜுனன், பீமனும் விழுந்துவிட்டார்கள். பிறகு நாயோடு தர்மபுத்திரர் செல்லும்போது மிகப்ரகாசத்துடன் திவ்யவிமானத்துடன் இந்திரன் எதிர்கொண்டுவந்து தர்மபுத்திரா மகாபாக்கியம் செய்தவன் விமானத்திலேறு என்றான். அப்போது தர்மர் தேவராஜனே! என் பிராணஸமர்களான அனுஜர்களும் த்ரௌபதியும் விழுந்துவிட்டார்கள். அவர்களின்றி எனக்கு ஸ்வர்கலோகம் வேண்டாமென்றார். அதைக்கேட்டு இந்திரன், அப்பா பயப்படாதே. உன் தம்பிமார்களும் உன் மனைவியும் முதலாகவே ஸ்வர்க்கலோகம் சேர்ந்துவிட்டார்கள். அவர்களை நீ அங்கு காண்பாய் உனக்குமட்டிலும் இந்தசரீரத்தோடே அங்கு பிரவேசம் உண்டென்றான். ஆனால் இந்தநாயும் விமானத்திலேற வேண்டுமென்றார் தர்மபுத்திரர் நாயோடு கூடியவனுக்கு ஸ்வர்க்கத்தில் ஆஸனம் கிடையாதென்றும் புண்யமே குறைந்துவிடும் என்றும் பலவாறு இந்திரன் சொன்னான். யுதிஷ்டிரர் தன்னையே அண்டிவருகிறபடியால் அண்டினவனைக்கைவிடுவதென்ற பாபம் மிகப்பொல்லாதென்று பலவாறு தர்மசூக்ஷ்மங்களை எடுத்துக் கூறினர். உடனே அவரது தர்மத்தைப்பார்த்து அந்நாய் யமனாக மாறிவிட்டது. யமன் அப்போது தன் புத்திரனைப்பார்த்துச சொன்னார். அப்பா தர்மத்தில் ஸ்திரமான உன்புத்தி ஒருபோதும் மாறவில்லை. முன்னொரு தடவை நச்சுப்பொய்கையில் சோதித்தேன். இரண்டாவதாக இவ்வளவு துக்கத்திலும் சோதித்துவிட்டேனென்று கூறித்தன்னுலகு சென்றான். பிறகு தர்மர் இந்திரனோடு ஸ்வர்க்கமேகினர் என்று பாரதக்கதை. இதில் நாய் இல்லாமல் ஸ்வர்க்கத்தில் நுழையமாட்டேனென்று பிடிவாதம்செய்த தர்மபுத்திரரை ஒவ்வொரு இந்தியனும் பின்பற்றுங்களென்று உபதேசிக்கிற காந்திபேச்சுக் கதையேறுமா. பிடிவாதத்திற்காக இந்திரன் நாயை ஏற்றினனா. சரணாகதரக்ஷணம் முக்கியமென்ற தர்மத்தையல்லவோ வெளிப்படுத்தினர். அந்தசக்தி அவர்கள் தம்பிக்குக்கூட கிடையாதே. ஸ்ரீராமனுக்கு அச்சக்தி இருந்தது. தர்மபுத்திரருக்கிருந்ததென்று இருவரைத்தான் புராணமூலமறிகி

ரும். இது இக்காலத்தில் எல்லா இந்தியனுக்கும் வேண்டுமாம். இது எம்மட்டுக்கு ஏற்குமென்பதை ஒவ்வொருவரும் அறிய வேண்டும். கேவலம் பிடிவாதத்தால் காரியம் ஸாதிக்க இப்புவியிலேயே முடியவில்லையென்பதை நாம் அடிக்கடி உணர்ந்துவந்தும் அறியவில்லையென்பது விந்தையே.

7. தேவாலய ப்ரவேச விஷயத்தில் ஜாதிஹிந்துக்கள் ஆதித்ராவிடர்கள் விஷயத்தில்காட்டும் மனப்பான்மை வருத்தத்திற்கு இடமானதாகவே இருக்கிறது. ஈசுவர க்ருபையால் தற்போது இந்தியாவில் தாழ்ந்தவகுப்பினர்களுக்குச் சமஉரிமைகளைத் தேடிக்கொடுக்க உழைப்பவர்களின் தொகை அதிகரித்துவருகின்றது என்கிறார்.

இதை கவனியுங்கள். இவர் 4-வதில் ஒவ்வொரு வருணத்திற்கும் ஒவ்வொரு தர்மம் விதிக்கப்பட்டிருக்கிறது. அதை அவனவன் அனுஷ்டிப்பதால் அவனவன் தன்மட்டில் மேற்பட்டவன்தான் என்றும் சாஸ்திரதர்மத்தைச் சொன்னவர் இங்கு தேவாலய ப்ரவேசம் செய்யாததால் தனக்குவருத்தம் சகிக்கவில்லையென்கிறாரே. இவ்விதம் முன்பின் விரோதமாய்த் தெரிந்தவர் பேசலாமா. ஆதித்திராவிடர்களுக்கு ஏற்பட்ட தர்மமென்ன கோவிலுக்குள் வந்து எல்லோரோடும் சேர்ந்துதான் தெய்வத்தை ஆராதிக்கவேண்டும் என்று ஏற்பட்டிருக்கிறதா. தெய்வம் பொதுத்தானே என்றால் தெய்வம்பொதுத்தான். அதை ஆராதிக்கும் முறைகள் ஒவ்வொரு வருணத்தவருக்கும் வித்தியாஸமாயிருக்கிறது. ஆராதிக்கும்வித்தியாஸத்தால் பலனில் வித்தியாஸமில்லையென்று நான் சாஸ்திரீயிற்பன்முறை கூறியுள்ளேன். ஆகவே தன் வருணத்திற்கு அடாத காரியத்தைச் செய்யாதே என்றுமட்டிலும் ஜாதிஹிந்துக்கள் அவர்களை விலக்குகிறார்களேயொழிய உனக்குத்தெய்வமில்லையென்று இதுவரை ஒருவனும் அவர்களைத்தடுக்க முன்வரவில்லை. 4-வது பாராவில் காந்தி கூறியபடி அவரவர்கள் வரணதர்மத்தை இட்டபடி நடத்துங்களென்றும் 6-வது பாராவில் அவர் சொன்னது முன்வசனத்திற்கு விரோதமாயிருப்பதால் விட்டுவிடவேண்டுமென்று நானும் இங்குகூறி இதை நிறுத்திக்கொள்கிறேன். சுபம்

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி,

மதுரை,

# ஆர்ய தர்மம் சந்தா நேயர்களுக்கு

## ஓர் விக்ஞாபனம்.

இப்பொழுதுபிராம்மண்யம்என்பது வெளிக்காவது கொஞ்சமிருப்பதையும் ஒழித்துவிடக் காங்கிரஸ் வாதிகளும் அவர்கள் பத்திரிகைகளும் தீண்டாமையொழித்தல், ருதுமதீவிவாஹம், விதவாவிவாகம், முதலியவைகளுக்கு ஆதரவாய் நம் ப்ராம்மணர்களே, பத்திரிகைகளில்எழுதவும் பிரஸங்கம் செய்யவும்முன்வந்துவிட்டார்கள். இவ்விதமிருக்க நாயக்கர், நாயுடுக்கள், ப்ராம்மணர்களையும் ஸ்ரீ ஜகத்குருக்களையும் வேதஸ்மிருதி புராணங்களையும் வசைமொழிகளால் அலங்கரிப்பதை நாம் யாரிடம் சொல்வது. இதற்கு ஜகதீசுவரன்தான் கருணைபுரிந்து அனுக்கிரஹிக்க வேண்டும். இப்பொழுது நம் குறைகளைக் கூசாமல் எடுத்துக்கூற நம ஆர்யதர்மத்தை விட வேறு பத்திரிகையே கிடையாது. கொஞ்சகாலம் ப்ராம்மணன் என்ற பத்திரிகை தோன்றினாளது பிரபவ ஆண்டில் இன்னும் ஒரு வாரத்திலாவது வெளிவராமலிருப்பது விசனிக்கத்தக்கது. ப்ராம்மண மகாநாடு ஒன்றைமறுபடி கும்பகோணம், மாயவரம், தஞ்சாவூர். முதலியவிடங்களில் எங்காகிலும் ரொம்ப சௌகர்யமானவிடத்தில ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அநுக்கிரஹத்தினால் கூட்டி எல்லோருடைய அபிப்பிராயத்தையும் கலந்து ஒரு முடிவுக்கு வரும்படி பிராம்மண ஸமூகத்தினரனைவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன். நம் ஆர்ய தாம பத்திரிகையை பிரபவஹூ தைமீ˚ முதல் வாரம்இருமுறையாகவும் இன்னும் பக்கங்களைப் பெரிதாக்கவும் ஜாஸ்தியாகவும் விருத்தி செய்யும்படிக்கு ஒவ்வொரு சநதாநேயர்களும்இப்பொழுதே நம் பத்திராதிபர் முகமாக ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளவர்கள் சமுகத்திற்கு உடனே விக்ஞாபனம் செய்துகொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அன்றியும் சந்தாதார் ஒவ்வொருவரும் அவரவர்களுக்கு வேண்டியவர்களைப் பத்திரிகையை ஆதரிக்கும்படிசெய்து பத்திரிகையின் சந்தாதார்களைவிருத்தி செய்யும்படியும கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

M. S. சுந்தரேசய்யர்.

செம்மங்குடி.

4-52



# இவ்வருஷத்திய உபாகர்மம்.

இவ்வருஷம் யஜுர் உபாகர்மம் விஷயமாக ஏற்பட்ட ஸம்சய நிவாரணத்தின்பொருட்டு ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீமடம் ஸ்ரீமகா ஸன்னிதான ஸபையில் ஏற்பட்ட தீர்மானமானது ஆடி-மீ 20௳ வெளியான "ஆர்யதர்மம்" பத்திரிகையிலும் 2—8—27ல் வெளியான சுதேசமித்திரனிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

ஷை தீர்மானத்தில் தைத்திரீயசாகிகளான யாஜுஷர்கள் ஆடி-மீ 28௳ உபாகர்மம் செய்யவேண்டியதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானம் வைததியநாததீக்ஷிதீய தர்மசாஸ்திர நிபந்தன கிரந்தத்தைப் பிரமாணமாகக்கொண்டு அனுஷ்டிப்பவர்கள் விஷயத்தில் சரிதானாயினும் நிர்ணயஸிந்து முதலிய தர்மசாஸ்திரநிபந்தன கிரந்தங்களின்படி ஆடி-மீ 29௳ சனிக்கிழமையன்று பூர்ணிமைக்கு ஸங்கவஸ்ப்ருக்த்வம் இல்லாவிட்டாலும்கூட அன்றுதான் தைத்திரீயசாகிகளான யாஜுஷர்கள் உபாகர்மம் செய்யவேண்டியதென்று ஏற்படுகிறபடியால் இவ்விஷயத்தை ஸ்ரீமடம் ஸ்ரீமஹாஸன்னிதானஸபையில் மறுபடி விமர்சம் செய்து ஷை நிர்ணயஸிந்து முதலான தர்மசாஸ்திர நிபந்தன கிரந்தங்களைப் பிரமாணமாகக் கொண்டு அனுஷ்டிப்பவர்களான ஆந்திராள், கர்னாடகாள், மஹாராஷ்டிராள் முதலான தைத்திரீய யாஜுஷர்கள் ஆடி-மீ 29௳ சனிக்கிழமையன்றுதான் உபாகர்மாவைச் செய்யவேண்டியது. காயத்ரீஜபம் எல்லோரும் 29௳ சனிக்கிழமையன்று செய்யவேண்டியது என்பதாய் முன் தீர்மானத்தின் தொடர்ச்சியாகத் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| முகாம் கஞ்சிக்கோடு<br>6—8—27 | ஸ்ரீமடம் ஆஸ்தானவித்வான்,<br>**T.V. Lakshminarayana Sastri.** |